Beginner Course - இரட்சிப்பு

5

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியுமா?

YESUDAS SOLOMON

BIBLE MINUTES

BIBLE MINUTES

பொருளடக்கம்

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியுமா?

இரட்சிக்கப்பட வேறு வழியில்லையா?

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும் என்பதற்கான 7 முக்கிய காரணங்கள்

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

1. தன்னுடைய பரிசுத்த இரத்தத்தை நமக்காக பாவபரிகாரமாக கொடுத்தவர் இயேசுவே

- எபி 9:22 - இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.
- எபி 9:26 - அவர் தம்மைத்தாமே **பலியிடுகிறதினாலே** பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்.
- எபி 9:28 - கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் **பலியிடப்பட்டார்**

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

1. தன்னுடைய பரிசுத்த இரத்தத்தை நமக்காக பாவபரிகாரமாக கொடுத்தவர் இயேசுவே

- நமக்காக ஹீரோவான கடவுள்களின் கதைய கேட்டிருக்கோம், நமக்காக **பலியான, பாவ பரிகாரியான** இயேசுவ போல ஒரு தெய்வம் உண்டா? இல்லவே இல்ல
- இந்த பாவ மன்னிப்ப, விக்கிரகங்களாலேயோ, மனிதர்களாலேயோ, கொடுக்கமுடியாது. பாவ பரிகாரியா மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த இயேசுவால மட்டுமே முடியும்

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

2. நாம் இரட்சிக்கப்பட இயேசுவின் நாமம் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது

- அப் 4:12 - இயேசுவாலேயே அன்றி **வேறொருவராலும்** இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே **அவருடைய நாமமேயல்லாமல்** வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

2. நாம் இரட்சிக்கப்பட இயேசுவின் நாமம் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது

- "இயேசு" என்கிற நாமத்தை தவிற வேறு ஒரு மனிதரின் நாமமோ, ஆவியின் நாமமோ, சொரூபங்களின் நாமமோ, மாகாத்மா என்பவர்களின் நாமமோ, புனிதர்களின் நாமமோ நமக்கு இரட்சிப்பை கொடுக்கமுடியாது

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

3. இயேசு மட்டுமே இரட்சிப்பின் வழி, வேறு ஒரு வழி கிடையாது

- *யோவா 14:6 - நானே **வழியும்** சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.*
- இயேசு மட்டும் தான் வழி, மோட்சம் போகிறதற்கு இன்னொரு வழி கிடையாது
- *யோவா 10:9 நானே **வாசல்**, என் **வழியாய்** ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் **இரட்சிக்கப்படுவான்**..*

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

4. இயேசு ஒரு நல்ல மேய்ப்பன்

- யோவா 10:11 - நானே **நல்ல மேய்ப்பன்**: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் **ஜீவனைக் கொடுக்கிறான்.**
- இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னுடைய ஜீவனை நமக்காக பலியாக கொடுத்தார், வேறு ஒருத்தர் இந்த உலக வரலாற்றில் இப்படி கொடுத்தது உண்டா?

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

5. இயேசு என்றாலே இரட்சகர் என்று தான் அர்த்தம்

- மத் 1:21 - அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.
- அவருடைய பெயருக்கே "பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும், விடுதலையாக்கும் இரட்சகர்" என்று தான் அர்த்தம்

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

6. இயேசுவை விசுவாசிப்பவனே இரட்சிக்கப்பட முடியும்

- *யோவா 3:16* தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை **விசுவாசிக்கிறவன்** எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.
- *அப் 16:31* கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை **விசுவாசி**, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்

இயேசுவால் மட்டுமே இரட்சிக்க முடியும்

7. இஸ்ரவேலரும்/யூதர்களும் இயேசுவை ஏற்றுக் கொள்ளனும்

- இஸ்ரவேலர்களுக்கு/யூதர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்தாலும், இயேசு அந்த பிரமாணத்தை உடைத்து, புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார் இஸ்ரவேலரையும், புறஜாதியவரான நம்மையும் தம்முடைய சிலுவையினாலே இணைத்திருக்கிறார் (எபே 2:11-18), அவர்களும் கூட **இயேசுவின் மூலமாக** தான் இரட்சிக்கப்பட முடியும்.

முடிவுரை

1 யோவான் *2:2* நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி இயேசுவே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, **சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.**

முடிவுரை

- இந்த வீடியோ மூலமா கேட்டவைகள் உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நெனைக்கிறேன்.
- இரட்சிப்பை குறித்து மேலும் அறிந்துக்கொள்ள எங்களுடைய மற்ற வீடியோக்களையும் பாருங்கள்.
- ஏதாவது கேள்விகள் இருந்தா *WhatsApp* அல்லது *Email* மூலமாக தொடர்புக்கொள்ளுங்கள்.
- இரட்சிப்பின் ஒரே வழியான இயேசு கிறிஸ்து முற்றும்முடிய இரட்சிப்பாராக

Thank You

BIBLE MINUTES

To know more, please watch other related videos from our YouTube channel or Facebook page and feel free to contact us for any further questions

By Phone / WhatsApp

+91 90190 49070
+91 76765 05599

Email

wordofgod@wordofgod.in

Social

YouTube: Bible Minutes
Facebook: Bible Minutes